தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை: திரு. மு.மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப.(ஓ).,
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்.004/மா/2020

நாள். 08.02.2022

திரு. வி.அன்பழகன்,
பூந்தமல்லி, சென்னை –58. – முறையீட்டு மனுதாரர்

ஆணையர், ஆவடி மாநகராட்சி,
ஆவடி. – எதிர் மனுதாரர்

சென்னை , பூந்தமல்லி, 13/9, மல்லியம் நரசிம்மன் நகரில் வசித்த திரு. வி.அன்பழகன் என்பவரின் 23.12.2019 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 24.12.2019–ல் பெறப்பட்டு 004/மா/2019 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனுவின் மீது உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அதனடிப்பிடையில் பரிசீலனை செய்து கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை , பூந்தமல்லி, 13/9, மல்லியம் நரசிம்மன் நகரில் வசித்த திரு. வி.அன்பழகன் என்பவர் தனது 23.12.2019 நாளிட்ட மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:

" திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மாநகராட்சி அதாவது ஆவடி பெருநகராட்சியாக இருந்த போது, திருவள்ளூர், மணவாளநகரில் உள்ள கிரீன் வாரியர்ஸ் நிறுவனத்துக்கு 1 முதல் 16 வரை மற்றும் 36 முதல் 48 வார்டு வரை 29 வார்டுகளுக்கு குப்பைகளை சேகரிக்க, ஆட்கள் வழங்க 1.1.2014 முதல் 31.12.2016 வரை ஆண்டுக்கு ரூ.5.60 கோடிக்கு ஒப்பந்தம் கொடுக்கப்பட்டது. கிரீன்வாரியர்ஸ் நிறுவனம் 13.12.2013–ல் ரூ.30 இலட்சத்துக்கு காப்புறுதி வங்கி உத்தரவாதம் கொடுத்துள்ளது. அந்த காப்புறுதி வங்கி உத்தரவாதம் 10.04.2017 உடன் காலாவதியாகிவிட்டது. 2015–16, 2016–17–ல் ஆவடி பெருநகராட்சி ஆணையராக இருந்த திரு.சி.மதிவாணன், கிரீன்வாரியர்ஸ் நிறுவனத்திடம் ஆண்டுக்கு ரூ.5.60 கோடியில் 20 சதவிகிதம் அதாவது சுமார் ரூ.1.20 கோடி இலஞ்சம் வாங்கிக்கொண்டு, மஸ்டர் ரோலில் முறைகேடுகள் (29 வார்டுகளில் குப்பைகளை சேகரிக்க, குறைவான ஆட்களை பெற்றுக்கொண்டு, அதிகமான ஆட்கள் சப்ளை செய்ததாக மஸ்டர் ரோல் முறைகேடு) உள்ளிட்ட பல சலுகைகளை, விதிமுறைகளை மீறி கிரீன் வாரியர்ஸ் நிறுவனத்துக்கு அளித்து வந்தார். ஆணையராக இருந்த மதிவாணன் 22.09.2016–ல்

தாம்பரம் நகராட்சி ஆணையராக மாறுதல் செய்யப்பட்டு, காஞ்சிபுரம் நகராட்சி ஆணையராக இருந்த முஜிபுர்ரகுமான், ஆவடி நகராட்சி ஆணையராக பணியில் சேர்ந்தார்.

குப்பைகளை சேகரிக்க ஆட்கள் சப்ளை செய்யும் கீரீன் வாரியர்ஸ் ஒப்பந்தம் 31.12.2016ம் தேதி முடிந்த நிலையில், புதிய ஒப்பந்தம் கோராமல், டெண்டர் டிரான்பரன்சி சட்டத்தை மீறி, சட்டத்துக்கு புறம்பாக ஆணையராக இருந்த முஜிபுர்ரகுமான், பொறியாளர் சீனிவாசன் இருவரும் கீரின் வாரியர்ஸ் நிறுவனத்திடம் ஒரு கோடி இலஞ்சம் வாங்கிக்கொண்டு

ந.க. எண்.9303/2011/எச்1 நாள் 30.12.16ன்படி 1.1.2017 முதல் 31.3.2017 வரை,
ந.க.எண்.9303/2011/எச்1 நாள்.3.2.17ன்படி 1.4.2017 முதல் 30.06.2017 வரை,
ந.க.எண்.9303/2011/எச்1 நாள் 26.06.2017ன்படி 1.7.2017 முதல் 30.9.2017 வரை ஒப்பந்த பணி நீட்டிப்பு கொடுக்கிறார்கள்.

2017–ல் ஜுன் மாதம் மீண்டும் ஆவடி நகராட்சி ஆணையராக சி.மதிவாணன் மாறுதல் பெற்று பணியில் சேருகிறார். ஏற்கனவே கீரின் வாரியர்ஸ் நிறுவனத்துடன் மதிவாணனுக்கு நெருங்கிய தொடர்பு இருப்பதால், ந.க.எண்.9303/2011/எச்1 நாள் 27.9.2017–ல் 1.10.2017 முதல் 31.03.2018 வரை கீரின் வாரியர்ஸ் நிறுவனத்துக்கு விதிமுறைகளை மீறி, சட்டத்துக்கு புறம்பாக ஒப்பந்தம் நீட்டித்து கொடுக்கிறார். இன்னும் கீரின் வாரியர்ஸ் நிறுவனம்தான் குப்பைகளை சேகரிக்க ஆட்களை சப்ளை செய்கிறது.

கீரின் வாரியர்ஸ் நிறுவனம் 13.12.2013ல் ரூ.30 இலட்சம் மதிப்புள்ள காப்புறுதி வங்கி உத்திரவாதம் 10.04.2017ல் காலாவதியாகிவிட்டது. காலாவதியான பிறகு கீரின் வாரியர்ஸ் காப்புறுதி வங்கி உத்திரவாதத்தை புதுப்பிக்கவில்லை.

ஆணையராக இருந்த முஜிபுர்ரகுமான், பொறியாளர் சீனிவாசன் இருவரும், கீரின் வாரியர்ஸ் நிறுவனத்திடம் ஒரு கோடி இலஞ்சம் வாங்கிவிட்டதால், கீரின்வாரியர்ஸ் நிறுவனத்திடம் காப்புறுதி வங்கி உத்திரவாதத்தை புதுப்பிக்க, அறிவுறுத்தாமல் ந.க.எண்.9303/2011/எச்1 1.4.2017 முதல் 30.6.2017 வரையும், 1.7.2017 முதல் 30.9.2017 வரையும் கீரின் வாரியர்ஸ் நிறுவனத்துக்கு ஒப்பந்த பணி நீடிப்பு கொடுத்துள்ளார்கள்.

ஜுன் 2017ல் மீண்டும் ஆணையர் பொறுப்பு ஏற்ற மதிவாணனும், கீரின்வாரியர்ஸ் நிறுவனத்தின் காப்புறுதி வங்கி உத்திரவாதம் காலாவதியான நிலையில், ரூ.20 இலட்சம் இலஞ்சம் வாங்கிக்கொண்டு 1.10.2017 முதல் 31.03.2018 முடிய ஒப்பந்த பணியை நீட்டித்து கொடுத்துள்ளார்.

டெண்டர் டிரான்பரன்சி சட்டத்தின்படி காப்புறுதி வங்கி உத்திரவாதம் இல்லாமல் ஒப்பந்தபணி செய்ய முடியாது. ஆனால் இங்கு ஒப்பந்த பணி சட்டத்துக்கு புறம்பாக நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆவடி நகராட்சியின் 2017–18ம் ஆண்டிற்காக உள்ளாட்சி நிதித்தணிக்கை அறிக்கையில் கீரின்வாரியர்ஸ் ஒப்பந்தம் விதிமுறைகள் மீறப்பட்டுள்ளதாக கூறியுள்ளது. கீரின்வாரியர்ஸ் நிறுவனம் 29.05.2017ல் தான் ஒரு இலட்சம் முதலீட்டில் GREENWARRIOR CONTRACTS PVT LTD(U74999TN2017PTC116829) நிறுவனமாக பதிவு செய்துள்ளது. 2017ல் பதிவு செய்த நிறுவனத்துக்கு 2013ல் எந்த அடிப்படையில், ரூ.5.60 கோடிக்கு டெண்டர் கொடுத்தார்கள் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. 2013 முதல் 2016 வரை கீரின் வாரியர்ஸ் குப்பைகளை சேகரிக்க, ஆட்களை சப்ளை செய்ய கொடுக்கப்பட்ட ஒப்பந்தத்தில் முறைகேடு நடந்துள்ளது. 2013 முதல் 2016 வரை கீரின் வாரியர்ஸ்க்கு ஒப்பந்தம் கொடுத்த ஆணையர்கள் பல கோடி இலஞ்சம் வாங்கியிருக்கிறார்கள்.

மேலும் டெண்டர் விதிமுறைகளை மீறி, சட்டத்துக்கு புறம்பாக 1.1.2017முதல் 31.3.2018 வரை, காப்புறுதி வங்கி உத்திரவாதம் காலாவதியான நிலையில் கீரின் வாரியர்ஸ் நிறுவனத்துக்கு கோடிக்கணக்கில் இலஞ்சம் வாங்கிக்கொண்டு ஒப்பந்த பணி நீட்டிப்பு கொடுத்த ஆணையராக

இருந்த முஜிபுர்ரகுமான், பொறியாளராக இருந்த சீனிவாசன் மற்றும் ஆணையராக இருந்த மதிவாணன், பொறியாளர் வைத்தியலிங்கம் ஆகிய நால்வர் மீது உரிய விரிவான விசாரணை நடத்தி, உரிய நடவடிக்கைகள் எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன் " என்று தெரிவித்துள்ளார்.

2) இப்புகார் மனு தொடர்பான அறிக்கையை அனுப்புமாறு 09.01.2020 நாளிட்ட கடிதம் மூலம் ஆவடி மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

ஆவடி மாநகராட்சி ஆணையாளர் தன்னுடைய 01.09.2021 நாளிட்ட அறிக்கையில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

" ஆவடி பெருநகராட்சி ஆணையரின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.9303/எச்1/2011, நாள்.20.12.2013ன்படி வார்டு எண்.1 முதல் 16 வரை மற்றும் வார்டு எண்.36 முதல் 48 வரை உள்ள 29 வார்டுகளில் உள்ள குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்களில் முதல் நிலை குப்பை சேகரித்தல் பணிக்காக 440 பணியாளர்கள் மற்றும் 22 மேற்பார்வையாளர்களை மொத்தம் 462 பணியாளர்களை உரிய தளவாடச் சாமான்களுடன் மூன்றாண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கி பணி மேற்கொள்ள கிரீன் வாரியர்ஸ், திருவள்ளூர் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி ஒப்பந்த பணிக்காலம் நிறைவடைந்து வந்த காலகட்டத்தில், ஆவடி மாநகரின் எல்லைகள் விரிவாக்கம் அடைந்துள்ளதாலும், நகரில் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 200ன்படி திடக்கழிவுகளில் மக்கும் குப்பைகளிலிருந்து இயற்கை உரம் தயாரிக்க 17 இடங்களில் பசுமை உரக்குடில் எனும் புதிய கட்டமைப்பு அமைக்கப்பட்டு, இயற்கை உரம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருவதாலும், அதற்கேற்ப தேவைப்படும் பணியாளர்களுக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி பெற பிரேரணை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்ததால், பொது சுகாதாரப்பணிகளின் அவசியம் கருதி, மேற்படி கிரீன் வாரியர்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட உத்தரவின் ஒப்பந்த பணிக்காலத்தினை நீட்டிக்க முறையாக நகர்மன்றத் தீர்மானம் பெறப்பட்டு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பணி நீட்டிப்பு வழங்கப்பட்டு பொது சுகாதாரப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றது. மேலும், மேற்படி கிரீன்வாரியர்ஸ் நிறுவனத்தின் பணிக்கான வங்கி உத்திரவாதம் தொடர்ந்து ஆய்வு செய்யப்பட்டு வரப்பட்டது. தற்போது, கடிதம் ந.க.எண்.32076/ஜே3/2018, நாள்.11.01.2019ல் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணி உத்தரவு வழங்கப்பட்டு அதன் அடிப்படையில் பணிகள் நடைபெற்று வருகிறது என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது " என்று தெரிவித்துள்ளார்.

மனுதாரர் மற்றும் ஆவடி மாநகராட்சி ஆணையருக்கு 19.01.2022 நாளிட்ட அழைப்பாணை மூலம் 24.01.2022 அன்று நடைபெறும் விசாரணயில் நேரடியாக ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டன.

ஆவடி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் சுகாதார ஆய்வாளர் இருவரும் 24.01.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்கண்டவாறு தங்களது வாக்கு மூலத்தை அளித்துள்ளனர்:

"ஆவடி மாநகராட்சியில் 29 வார்டுகளில் உள்ள குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்களில் முதல்நிலை குப்பை சேகரித்தல் பணிக்காக 426 பணியாளர்களை உரிய தளவாடச் சாமான்களுடன் 1.1.2014 முதல் 31.12.2016 வரை மூன்றாண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள கிரீன் வாரியர்ஸ் என்கின்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது என்றும், ஒப்பந்த பணிக்காலம் 31.12.2016ல் நிறைவடைந்ததும் மேற்படி கிரீன் வாரியர்ஸ் நிறுவனத்திற்கு 1.1.2017லிருந்து 3 மாதத்திற்கு ஒரு முறை டிசம்பர் 2018 வரை பணி நீட்டிப்பு வழங்கப்பட்டது.

ஒப்பந்தம் நீட்டிப்புக்காக நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து பின்னேற்பு (Ratification) பெறப்படவில்லை என்றும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் இந்நேர்வு தொடர்பாக, ரூபாய் 30 லட்சத்திற்கான வங்கி உத்திரவாதம் **(Bank guarantee) Development Credit Bank**லிருந்து 14.6.2017 மற்றும் 19.4.2018ல் பெறப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தைதெரிவித்து அதன் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்பிக்கிறோம்.

I) **Tender Renewal**

1.1.2017 to 31.3.2017

1.4.2017 to 30.6..2017

1.7.2017 to 30.9.2017

1.10.2017 to 31.3.2018

1.4.2018 to 30.6.2018

1.7.2018 to 30.9.2018

1.10.2018 to 31.12.2018

1) Bank Guarantee for Rs.30 Lakhs with the Development Credit Bank dated for the period from 13.12.2013 to 10.04.2017

2) Bank Guarantee dated 27.2.2018 to 10.4.2019

11.4.2017 முதல் 13.6.2017 வரையிலான காலத்திற்கான வங்கி உத்திரவாதம் நகராட்சி அலுவலத்தில் இல்லை எனவும், மேலும் 14.6.2017 முதல் 10.4.2018 வரையிலான வங்கி உத்திரவாதத்தின் நகல் இம்முறை மன்றத்தில் தற்போது எங்களால் சமர்பிக்கப்படுகிறது. மேற்கண்ட வங்கி உத்திரவாதத்தின் அசலினை இம்முறை மன்றத்தில் இன்னும் ஓரிரு நாட்களில் சமர்பிக்கிறோம் எனவும் தெரிவித்துக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

5) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, ஆவடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை, மற்றும் ஆவடி மாநகராட்சி ஆணையர் மற்றும் சுகாதார ஆய்வாளர் இருவரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. அதில் பின்வரும் விவரங்கள் அறியப்பட்டுள்ளன.

மனுதாரர் தனது மனுவில் ஆவடி மாநகராட்சியில் ஆட்கள் மூலம் குப்பைகளை சேகரிக்கும் பணி திருவள்ளூரைச் சேர்ந்த கிரீன் வாரியர்ஸ் நிறுவனத்துக்கு 1.1.2014 முதல் 31.12.2016 வரை 3 ஆண்டுகளுக்கு ரூ.5.60 கோடிக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது என்றும் ஒப்பந்தம் முடிந்த பின்னர் மேற்கண்ட கிரீன்வாரியர்ஸ் நிறுவனத்திற்கு விதிமுறைகளை மீறி, சட்டத்திற்கு புறம்பாக வங்கி உத்தரவாதம் காலாவதியான நிலையில் மாநகராட்சி அலுவலர்கள் கையூட்டு பெற்று டெண்டர் டிரான்ஸ்பரன்சி சட்டத்தை மீறி ஒப்பந்த நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், மேற்கண்ட நிறுவனத்தால் 13.12.2013–ல் ரூ30 இலட்சத்துக்கு காப்புறுதி வங்கி உத்தரவாதம் கொடுத்துள்ளது என்றும் மேற்கண்ட உத்தரவாதம் 10.04.2017–ல் காலாவதியாகிவிட்டது என்றும் காலாவதியான பின்னர் கிரீன் வாரியர்ஸ் காப்புறுதி வங்கி உத்தரவாதத்தை புதுப்பிக்கவில்லை என்றும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட ஒப்பந்தம் 31.12.2016–ல் முடிவடைந்த நிலையில், 1.1.2017 முதல் 31.03.2017 வரையிலும், 1.4.2017 முதல் 30.06.2017 வரையிலும் 1.7.2017 முதல் 30.9.2017 வரையிலும் மேலும்

1.10.2017 முதல் 31.03.2018 வரையிலும் இவ்வாறு ஒப்பந்தம் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும் ஆவடி மாநகராட்சியின் 2017–18 ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதித்தணிக்கை அறிக்கையில் கிரீன்வாரியர்ஸ் ஒப்பந்தத்தில் விதிமுறைகள் மீறப்பட்டுள்ளதாக தெரிவித்து அவற்றின் நகல்களை மனுதாரர் இம்முறைமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். மேற்கண்ட ஒப்பந்தப்பணி 31.12.2016–ல் முடிவடைந்ததும், 1.1.2017–லிருந்து 3 மாதத்திற்கு ஒரு முறை டிசம்பர் 2018 வரை பின் வருமாறு பணி நீட்டிப்பு ஆவடி மாநகராட்சியால் பணி நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் ஒப்பந்த நீட்டிப்பிற்கான பின்னேற்பு ( Ratification) நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து பெறப்படவில்லை.

1.1.2017 முதல் 31.03.2017 வரை

1.4.2017 முதல் 30.6.2017 வரை

1.7.2017 முதல் 30.9.2017 வரை

1.10.2017 முதல் 31.03.2018 வரை

1.4.2018 முதல் 30.6.2018 வரை

மேலும் ரூபாய் 30 லட்சத்திற்கான வங்கி உத்தரவாதம் 13.12.2013 முதல் 10.04.2017
ரூபாய் 30 லட்சத்திற்கான வங்கி உத்தரவாதம் 27.02.2018 முதல் 10.04.2019

மேற்கண்ட வங்கி உத்தரவாதத்தின் அசல் இம்முறைமன்றத்தின் பார்வைக்கு ஓரிரு நாட்களில் சமர்ப்பிக்கப்படும் என ஆவடி மாநகராட்சி ஆணையர் தனது 24.01.2022 நாளிட்ட வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தும் மேற்கண்ட ஆவணம் மற்றும் 11.4.2017 முதல் 26.02.2018 வரையிலான வங்கி உத்தரவாதத்தின் நகல் இம்முறை மன்றத்தில் ஆணையரால் இதுவரை சமர்ப்பிக்கவில்லை. இத்தகைய செயல் மேற்கண்ட வங்கி உத்தரவாதத்தின் அசல் ஆவணங்கள் ஆவடி மாநகராட்சி அலுவலகத்தில் பாதுகாக்கப்பட்டு உள்ளதில் சந்தேகத்தை எழுப்பியுள்ளது. மேலும் ஆணையரிடம் சமர்ப்பிக்கக் கோரிய 11.4.2017 முதல் 26.2.2018 வரையிலான வங்கி உத்தரவாதம் நகராட்சியால் பெறப்பட்டிருக்க வாய்ப்பில்லை எனவும் யூகிக்க தோன்றுகிறது.

இந்நேர்வில் ஆவடி மாநகராட்சியில் ஆட்கள் மூலம் குப்பைகளை சேகரிக்கும் பணிக்கு கிரீன்வாரியர்ஸ் நிறுவனத்திற்கு விதிகளை மீறி சட்டத்திற்கு புறம்பாக வங்கி உத்தரவாதம் காலாவதியான நிலையில் ஆணையாளரால் ஒப்பந்தம் நீட்டிப்பு வழங்கியுள்ளார். ஆனால் ஒப்பந்த நீட்டிப்பிற்கான பின்னேற்பு (Ratification) நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து பெறப்படவில்லை. இச்செயல் கடமையில் அதிகாரிகளின் அலட்சிய போக்கை காட்டுவதாகவே இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. மேலும் வங்கி உத்தரவாதத்தின் அசல் ஆவணங்களை ஓரிரு நாட்களில் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிப்பதாக 24.01.2022 அன்றைய நேரடி வாக்குமூலத்தில் உறுதியளித்த தற்போதைய ஆவடி மாநகராட்சி ஆணையாளர் அந்த ஆவணங்களை சமர்ப்பிக்காமல் அலட்சியமாக இருந்துள்ளார். ஆவணங்கள் இல்லை என உறுதி செய்ய ஆணையரின் இந்த நடவடிக்கையே போதுமானது. நேரில் விசாரணையின்போது அறிவுறுத்தியும், தொலைபேசியில் நினைவூட்டிய பின்பும் இவரின் உதாசீனம் கண்டனம் செய்யப்படுகிறது. The Corporation Commissioners and officials responsible for such reprehensible conduct of not getting CMA's orders or at least ratifications and wanton default in ensuring the currency and validity of Bank guarantees for the missing periods during the time of garbage removal should be dealt with deterrently by severe disciplinary action by DMA. இதுபோன்று கடமை தவறியும் அலட்சியமாகவும், விதிமுறைகளுக்கு மாறாகவும் செயல்பட்ட கடமை தவறிய மற்றும் மாநகராட்சிக்கு பெரும் நிதியிழப்புக்கு காரணமான ஆணையாளர்கள், சம்மந்தப்பட்ட அனைத்து அலுவலர்கள் மீதும் துறை ரீதியான கடும் ஒழுங்கு நடவடிக்கையை

எடுத்திடுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 08–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு.வி.அன்பழகன்,
எண்.13/9, மல்லியம் நரசிம்மன் நகர்,
பூந்தமல்லி,
சென்னை – 600 056.

2)ஆணையாளர்,
ஆவடி மாநகராட்சி,
ஆவடி.

3)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

4)இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர்(Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

08/02/22

செயலாளர்

சென்னை–600 032